# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:171** **தேதி:-20.09.2014**

# BSNL மூடலா?

அன்பார்ந்த தோழர்களே,

இந்தியாவில் மிகப்பெரும் பொதுத்துறை நிறுவனமான பிஎஸ்என்எல் உட்பட பத்து முக்கிய பொதுத்துறை நிறுவனங்களை 'நட்டத்தில் இயங்குபவை' என்று காரணம் காட்டி முற்றாக மூடுவதற்கு நரேந்திர மோடி அரசு திட்டமிட்டு வருகிறது. மத்தியில் பாஜக அரசு பதவியேற்று மூன்று மாதங்களே ஆகியுள்ள நிலையில், பன்னாட்டு, உள்நாட்டு பெரும் முதலாளிகளின் கொள்ளை லாபத்திற்கு வழி செய்யும் விதத்தில் அனைத்தும் தனியார்மயம் என்ற நாசகர பாதையில் வெகு வேகமாக பயணித்து வருகிறது. இந்நிலையில், நட்டத்தில் இயங்குபவை என்று காரணம் காட்டி 10 பெரிய பொதுத்துறை நிறுவனங்களை மூடி விடுவது என்று திட்டமிட்டுள்ளது.

பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (பிஎஸ்என்எல்), மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (எம்டிஎன்எல்), ஏர் இந்தியா, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், இந்துஸ்தான் பெர்டிலைசர்ஸ் கார்ப்பரேசன், எச்எம்டி மிஷின் டூல் லிமிடெட் உள்ளிட்ட நிறுவனங்கள் இதில் அடங்கும். இது தொடர்பாக மத்திய அமைச்சரவைக்கு அறிக்கை அளிக்கும் பொருட்டு ஆலோசனை நடத்துவதற்காக செவ்வாயன்று தில்லியில் மத்திய அமைச்சரவை செயலாளர் அஜித் குமார் சேத் தலைமையில் உயரதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் என்ன பேசப்பட்டது என்பது குறித்து தகவல் வெளியிடப் படவில்லை. எனினும் மேற்கண்ட நிறுவனங்களை உடனடியாக மூடுவதற்கான ஆலோசனைகளை வரையறை செய்து அமைச்சரவைக்கு அளிப்பது என தீர்மானிக்கப்பட்டதாக மத்திய அமைச்சரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. பொதுத்துறை நிறுவனங்களை மூடுவது குறித்துகடும் அதிர்ச்சியையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொலைத் தொடர்பு சேவைகள் இத்தகைய பொதுத்துறை நிறுவனங்கள் மூலமாக மலிவான கட்டணத்தில் கிடைத்து வந்தன. இந்நிறுவனங்கள் மூடப்பட்டால் சந்தேகம் இன்றி இவற்றின் கட்டணங்கள் கடுமையாக உயர்த்தப்படும். ரயில்வே துறைக்கு அடுத்து பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களே நாடு முழுவதும் அதிகமான நிலச் சொத்துக்களை

வைத்துள்ளன. எந்த தனியார் கம்பெனியிடமும் இந்நிறுவனங்களிடம் உள்ளது போன்று கேபிள்கள், கோபுரங்கள். கட்டிடங்கள் போன்ற சொத்துக்கள் மற்றும் கட்டுமானங்கள் இல்லை.

தனியார் கம்பெனிகள் இந்த கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திக் கொள்ள அரசை நிர்ப்பந்தித்து வருகின்றன. தற்போதையநடவடிக்கை கார்ப்பரேட்டுகளை திருப்திப்படுத்த எடுக்கப் படுவதாகும். பிஎஸ்என்எல், 9 ஆண்டுகள் வரை ரூ.45 ஆயிரம் கோடி வரை லாபம் சம்பாதித்து கொடுத்தது. மொபைல் கருவிகளுக்காக டெண்டர் விட்டபோதுதான் நட்டம் தொடங்கியது. சேவைகளை மேம்படுத்தவும் நிதியை பலப்படுத்தவும் பல ஆலோசனைகளை ஊழியர் சம்மேளனம் வழங்கியது. ஆனால் அவை அரசினாலும் பிஎஸ்என்எல் நிர்வாகத்தினாலும் கண்டுகொள்ளப் படவில்லை. கடந்த 2 ஆண்டுகளாக நட்டம் குறைந்து வந்தது. மேலும் மேம்படுவதற்காக நல்ல வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

இந்த சூழ்நிலையில் பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களை மூடி விட திட்டமிடுவது மொத்த சேவைகளையும் கார்ப்பரேட்டுகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தொலைத் தொடர்பு சேவைகளை அடகு வைப்பதாகும். அவற்றை பாதுகாப்பதற்காக இறுதி வரை போராடுவோம். எனவே பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களை மூடும் திட்டத்தை கை விட்டு இந்நிறுவனங்களை புத்தாக்கம் செய்யுமாறு அரசுக்கு கோரிக்கை விடுக்கிறோம். இந்நிறுவனத்தை மூடஅரசு முடிவு செய்தால் மிகப்பெரும் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கின்றோம்

**ஒன்று பட்ட போராட்டம் ஒன்றே நமது துயரோட்டும்**!!!!!!

**வாழ்த்துக்களுடன்,**

**தோழமையுள்ள,**

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்**